[1974 மார்ச் 6

Arecanut plantations

* 308 Q.—Thiru N. DENNIS

Thiru N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the arecanut plantations at Kallar area in Coimbatore district has been infested with unknown diseases during September 1973; and

(*b*) if so, the steps taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) தலைவர் அவர்களே, பாக்கு மரத்தைத் தாக்கிய புதிய நோய் பங்கிசைட், அது காலான் கொல்லி மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்த நோயினுல் எவ்வளவு மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு பாக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, இந்த நோய் தொடங்கியவுடனே அரசு அதிகாரிகள் சென்று அதை கட்டுப்படுத்தியிருக்கிருர்கள், ஆகையினுல் பாதிப்பு கடுமையாக இருக்காது என்று கருதுகிறேன்.

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை

*309 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தெய்வீகப் பேரவையின் இயக்குநர்கள் யார், யார்?

(இ) அதன் தலைவர் யார்?

(உ) அவர்களின் பணி எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ 362–363-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1974 மார்ச் 6]

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்தத் தெய்விகப் பேரவையிலே மனிதத் தெய்வங்கள் கலந்துகொள்கின்றனவா அல்லது தெய்வலோகத்திலே உள்ளவர்கள் கலந்து கொள்கின்றனரா?

(விடை இல்லை.)

முதியோர் இல்லங்கள்

* 310 வினா.—**திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி, திருவரங்கம், மயிலை கபாலி ஆகிய கோயில்களின் உபரி நிதியில் இருந்து முதியோர் இல்லங்கள் நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: திருத்தணி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து மட்டும் முதியோர் இல்லம் ஒன்று ஆரம்பித்து நடத்தும் செயற்குறிப்பு ஒன்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரின் பரிசீலனையிலிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், பேரவையின் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று திரு. செ. கந்தப்பன் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானம். அதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிவதற்கு முன்னதாக இந்தத் தீர்மானத்தை நான் படிக்க வேண்டும். தீர்மானத்தைப்படிக்கிறேன் :